**செய்தி வெளியீடு எண்: 210** **நாள்: 04.04.2013**

**<u>பத்திரிகை செய்தி</u>**

சென்னை ஆதிதிராவிடர் நலத்துறை சார்பாக இன்று 04.04.2013 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டு பணி அமைப்பு மூலம் 2011–2012 ஆம் ஆண்டிற்கான சிறந்த எழுத்தாளர்களாக தேர்வு செய்யப்பட்ட ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த 10 நபர்களுக்கும், ஆதிதிராவிடர் அல்லாதோர் ஒருவருக்கும் என மொத்தம் 11 எழுத்தாளர்களுக்கு சிறந்த எழுத்தாளர்களுக்கான பாராட்டு சான்றிதழும், ஊக்கத் தொகை ரூ.20,000/–த்தில் முதல் தவணைத் தொகை தலா ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு.ந.சுப்ரமணியன் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலர்/கலை இலக்கிய மேம்பாட்டுப்பணி அமைப்பின் தலைவர் திருமதி. கண்ணகி பாக்கியநாதன், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குனர் திரு. சா. விஜயராஜ் குமார், இ.ஆ.ப., தாட்கோ மேலாண்மை இயக்குநர் திருமதி. ஆ. சுகந்தி, இ.ஆ.ப., பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் திரு.கெ.வி. கிரிதர், இ.வ.ப., மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர். கா.மு. சேகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**இயக்குநர்,**
**ஆதிதிராவிடர் நலத்துறை,**
**சென்னை–5.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**